இம்மானுவேல், கடவுள் நம்மோடு – இயேசு கிறிஸ்து வார்த்தையிலிருந்து உடலெடுத்ததை, வானத்தையும் பூமியையும் உவமையாக்கி, மனுவுருவானதன் மறைபொருளை திருவருகை கால நான்காம் ஞாயிறு நுழைவு வாழ்த்தொலி அழகாக எடுத்துரைக்கிறது. மனிதப் பாவம் மீதான ஆத்திரத்தாலோ, பழிவாங்கும் படலத்தாலோ வானம் திறக்கவில்லை. மாறாக அன்பின் காரணமாக கடவுளே மனித உடலெடுத்தார். பதில் மொழியாக பூமியும் கரம் உயர்த்தி அவரை ஏந்தி கொண்டு, உலக மீட்பரை வரவேற்பது, அவரை ஏற்றுக்கொள்வது அனைத்தும், நமது மனதை திறந்து வைத்திருக்கிறோமா என்பதை பொறுத்துள்ளது.

நாளை, கிறிஸ்து பெத்லேகமில் பிறக்கிறார். கோலாகல சூழ்நிலையில் அல்லது அச்சமும் நடுக்கமும் கலந்த சூழ்நிலையில் இது நிகழவில்லை. இது நிகழ்வதற்கு முன்பு எந்தவொரு எச்சரிக்கையோ, அறிவிப்போ, உலகமே மாறிவிடும் என்ற எதிர்பார்ப்போ இல்லை. சாலையில் மக்கள் கூட்டம் கூடவில்லை, கோலாகலம் தொடங்குவதைக் காண மக்களிடையே ஆர்வமில்லை. இரவு நேரத்தில் பனி துளி போல கடவுள் நம்மிடையே வந்தார். வானத்தையே அண்ணார்ந்து பார்த்து நிற்பதற்கு காலம், நேரம், மாதம், தேதி போன்றவை முன்கூட்டியே நமக்குச் சொல்லப்பட்டதா? ஆனால் கடவுள் இவ்வாறு வரவில்லை.

வானத்தின் மேகங்களிலிருந்து அவர் வரவில்லை, அவரது படைப்பிலிருந்து வந்தார். நாம் உணராவிட்டாலும் நம்மை முழுமையாக மாற்றுவதற்கு, மண்ணிலிருந்து படைக்கப்பட்ட நாம், வானத்தின் பனிதுளியால் மூடப்படிருக்கிறோம். நித்திய உருவமாற்றத்திற்கு இதுவே அத்தியாவசியம். இரவில் நமது கண்கள் பார்க்க முடியாது என்பதல்ல, நம்மோடு வந்துவிட்ட இனுமாலை, வானத்தின் வெளிச்சத்தில் நம்மால் காண முடியும். அமைதியாக, ஆர்ப்பாட்டம் இல்லாமல் இறை மென்மையில் மனுவுருவானது. மாசு அடைந்திருக்கும் இயற்கையைப் பாதிக்காமல், மீட்பை விதைத்து, பாடுகளை மட்டும் அவர் தாமே சுமந்து கொண்டார்.

காலம் நிறைவேறிய போது வந்திறங்கிய அவருடனான நமது ஒன்றிப்பு அன்பில் உருவாக்கப்பட்டுள்ளது. அவரது அன்பை, தொடக்கத்தில் நிராகரித்த நம்மை அவரோடு இணைப்பதற்கு, தந்தை தமது மகனை அனுப்பி மீட்பளித்தார்.

அழிந்துபோகும் நமது உடலில் படர்ந்திருக்கும் தூசியின் மீது வானத்தின் பனிதுளி விழுந்து நம்மை உயர்த்தியது. அவரது வருகையின் போது, மாட்சிமிக்க பேரொளியால் அந்த பனிதுளி மனிதன் மீது விழுந்தது; உதய சூரியன் கிறிஸ்துவின் ஒளியால், படைத்தவரிடமே மனிதன் ஈர்த்துக் கொள்ளப்படுவான். அன்பு மனுவுருவானது போல, கடவுள் மனிதனைப் படைத்தது போல, கிறிஸ்துமஸ் நன்னாளில் மீட்பரும் அரசருமான அவரை நாம் வரவேற்போம். +

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# NEWREC

24 டிசம்பர் 2017
திருவருகை காலம்
4ம் ஞாயிறு



# வானமே, பனி மழை பொழியட்டும்

**மினவுதல் மாதா தேவாலயம்**

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2017 டிசம்பர் (மார்கழி) மாதத்தின் கருப்பொருள்:*

*கிறிஸ்துவே நமது எதிர்நோக்கு*

***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***

***( 1848 – 2018 )***

**<u>பங்கு அலுவலக நேரம்:</u>**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



<u>இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்</u>: திருவருகைக் காலம் - நான்காம் ஞாயிறு : (ஆண்டு இரண்டு) சனி 23-12-2017 ஞாயிறு 31-12-2017

2 சாமு 7: 1-5, 8b-12, 14a, 16    தி.பா 88: 2-3, 4-5, 27-29    உரோ 16: 25-27    லூக்கா 1: 26-38

**ஆண்டவருடைய பேரன்பைப் பற்றி நான் என்றும் பாடுவேன். (தி.பா 88)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 23 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. பெனடிக்ட்) | 03 பெப்ரவரி 2018 170 ஆம் ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டம் |
| ஞாயிறு | 24 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (வழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (ஆங்கிலம்) (வழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | |




**ஞாயிறு 24** : மாலை **5.00** மணி (ஆங்கிலம்) இரவு **7.00** (தமிழ்) இரவு **9.00** (சீனம்) இரவு **11.00** (ஆங்கிலம்) மாலை **4.30** (தித்தி)

**திங்கள் 25** : **கிறிஸ்மஸ் நாள்:** காலை **7.00** மணி (தமிழ்) காலை **9.00** (ஆங்கிலம்) காலை **11.00** (சீனம்) மதியம் **1.00** (தே.மொ)

| | | | | |
|---|---|---|---|---|
| செவ் | 26 | 7.00 மா | திருப்பலி | |
| புதன் | 27 | 7.00 மா | திருப்பலி | |
| வியா | 28 | 7.00 மா | திருப்பலி | மாசில்லாக் குழந்தைகள் தினம் ( குழந்தைகளுக்கு ஆசீர்வாதம்) |
| வெள் | 29 | 7.00 மா | திருப்பலி | |

**கிறிஸ்து பிறப்புக் காலம் - திருக்குடும்ப விழா: ( ஆண்டு இரண்டு)**

தொநூ 15: 1-6, 21:1-3    தி.பா 104: 1-2, 3-4, 5-6, 7-8    எபி 11: 8, 11-12, 17-19    லூக்கா 2: 22-40

**ஆண்டவர் தம் உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொண்டுள்ளார் (தி.பா 104)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 30 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (வழிபாட்டுக் குழு) | **31 டிசம்பர் : அனைத்து திருப்பலிகளிலும் குடும்பங்களுக்கு விசேட ஆசீர்வாதம் வழங்கப்படும்.** |
| ஞாயிறு | 31 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (வழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (ஆங்கிலம்) (கு. வா. பணிக்குழு)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது, மிண்டும் அடுத்தவருடம் 2018 ஜனவரி 7ஆம் திகதி பதிவுகள் நடைபெறும்**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

**புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி :** இரவு 8.00 நான்கு மொழி திருப்பலி - நள்ளிரவு வரை அமைதியில் செபித்தல்

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

திருப்பலியை வழி நடத்திய அதிச புனித பெனடிக் (ஜலான்லாபு)
மற்றும் திருவழிபாட்டுக் குழுவினருக்கு நன்றி

**<u>2017 டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்</u>**

1. **ஆலய காணிக்கை**
   16/17 டிசம்பர் ரிம: 9, 112.90
   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!
2. **ஏழைகளுக்கான கிறிஸ்மஸ் கொண்டாட்டம்**: இதை ஏற்பாடு செய்த பங்கு மனித வள மேம்பாட்டுக்குழு, பல்சமயப் பணிக்குழு மற்றும் 170 ஆம் ஆண்டு கொண்டாட்ட ஏற்பாட்டுக்குழு , நிதி தந்து உதவியவர்கள், தவியாளர்கள். தங்களுடைய ஆதரவை வழங்கிய அனைவருக்கும் நன்றிகள். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!
3. **திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனைக்கு:**
   I. திருவழிபாட்டு நாட்காட்டி 2018 (ஆ) : ரி.ம 6.00
   II. திருவழிபாட்டு நாட்காட்டி 2018 (த) : ரி.ம 5.00
   III. அன்றாட சிந்தனை 2018 (ஆங்கிலம் தமிழ் : ரி.ம 20.00
   IV. **மறைந்த முதன்மைக்குரு (மோன்சின்யூர்) அந்தோணி தோமஸ்** அவர்களுடைய நினைவுப் புத்தகம் விற்பனையில் உள்ளது. விலை. ரிம: 5.00

- **மினவுதல் மாதா தேவாலயத்தின் முக நூல் பக்கம் (@churchofthevisitationsban)** ஆலயத்தின் முக நூலில் அண்மையச்செய்திகள் பதிவேற்றம் கண்டு வருகின்றன. அனைத்து வயதினரைக் கொண்ட பங்கு மக்களோடும் தொடர்புகொள்ள இது ஒரு நல்ல தளம்
- **ஐஹீரோ நிதி ஓட்டம்** - Aclac.இணைந்து ஏற்பாடு செய்கிறார்கள். நாள்: 21/01/2018 கூடுதல் விவரங்களுக்கு அழையுங்கள்: பமேலா 016-630 6196
- ***CAGED*** - இது தொடர்பான கார்டுகளை வரவேற்புப் பணிக்குழுவினரிடம் இருந்து பெற்றுக்கொள்ளவும்.

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்.**
மரியா தங்கா த/பெ ஜோசப் (இறப்பு: 14/12/2017)
கேப்ரியல் முரு இறப்பு 21/12/2017
முடிவில்லா ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!

**பங்கு அலுவலகம் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு 24,25,26 தேதிகளில் மூடப்பட்டிருக்கும். அவசரத் தொடர்புக்கு . நாதன் 012-684 0750**
**ஸ்டீபன் சாந்தமரியா 016- 2056 092**







- **ஜோன் போல் II தூதுரை இல்லம்:** எண்: 11 & 12 கடை இல்லம் (நம் உணவுவிடுதிக்குப் பின் உள்ளது) இப்போது பராமரிப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவை முழு வெற்றியடைய உங்கள் செபங்களில் ஒப்புக்கொடுங்கள்.
- **செண்டயான் கல்லறைத் தோட்டம்:** சிரம்பான் கிறிஸ்துவ கல்லறைப் பணிக்குழு இந்த இடத்தை வெகுவிரைவில் பயன்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்துவருகின்றது. இதைப் பற்றிய ஏதேனும் விவரங்களுக்கு பங்கு அலுவலகத்தை நாடவும். அவ்வப்போது இதைப் பற்றிய அண்மைய செய்திகளை எதிர்பாருங்கள்.
- **2018 ஆம் ஆண்டின் திருமணம் செய்வோரின் கவனத்திற்கு:** குருவானவரைச் சந்திக்க தயவு செய்து முன்பதிவு செய்துகொள்ளவும். கத்தோலிக்க திருமண பயிற்சிகள் விரைவில் தொடங்கவுள்ளன.
- **பங்கின் பராமரிப்புக்கு நிதியுதவி எதிர்பார்க்கிறோம்:** பங்கு அளவில் செய்யப்படும் அனைத்து பராமரிப்பு செலவுகளுக்கும் உங்கள் நிதியுதவிகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் நன்கொடைகளை பணமாகவோ காசோலையாகவோ செலுத்தலாம். காசோலைகளை Church of Visitation என்று எழுதி ஆலய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்
  குறிப்பு: நன்கொடை வழங்குவோர் நீங்கள் வழங்கும் தொகைக்கு வரி விலக்குப் பெற பங்கு அலுவலகத்தை நாடவும்.
- **ஆலய வளாகம் மற்றும் அறைகள் முன்பதிவு:** கூட்டங்கள், நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு முன்கூட்டியே அறைகளை பங்கு அலுவலகத்தில் பதிந்துகொள்ளுங்கள். கடைசி நேர பதிவு அனுமதிக்கப்படாது.
- **ஆலயத்தூய்மை கடைப்பிடியுங்கள்:** ஆலயம் அதன் சுற்றுப்புறம் (உள்ளும் புறமும் எப்போதும் தூய்மையாக வைத்திருங்கள்.மாதா கெபி மற்றும் மெழுகுத்திரி தட்டுகள் ஆகியவற்றை எப்போதும் தூய்மையாக வைத்திருப்போம்.



**பங்கு மக்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துகளும்**
**இறை ஆசீரும் மற்றும் புத்தாண்டு** நல்வாழ்த்துகளும்
உரித்தாகட்டும் !
**அருள்திரு. ஜோர்ஜ், அண்ட்ரூ மற்றும்**
**மினவுதல் தேவாலய பணியாளர்கள்**

